[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 பிப்ரவரி 20

கருத்துகளை, பேசுகின்ற உங்கள் கட்சி உறுப்பினரிடம் சொல்லி, பேசச் சொல்லுங்கள். அனைவருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) அதுபோன்றே செய்துவிடுங்கள். மிக்க நன்றி. (குறுக்கீடு)

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. நன்றியெல்லாம் ஒன்றும் தேவை இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல் (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். எனக்கு நேரமில்லை. திரு. துரைமுருகன் அவர்கள், நீங்கள் மற்ற நேரத்தில் பேசுங்கள். இப்பொழுது நேரமில்லை, உட்காருங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 234 முதல் 238 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. ஆர். சின்னசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும்*